நெல்லியாளம் நகராட்சிஅலுவலகம்,
பந்தலூர் – நீலகிரிமாவட்டம்.

## அவசரக் கூட்டம் 07/09/2018 வெள்ளிக்கிழமை

**பொருள் எண்.1**

அரசாணை எண் 73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.07.2018 மற்றும் அரசாணை எண் 76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.26.07.2018–ன்படி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 அட்டவணை 4 ல் உள்ள விதிகளில் கூறப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் நெல்லியாளம் நகராட்சி சொத்து வரியினை 01.04.2018 முதல் பொது சீராய்வு செய்ய திட்டமிட்டப்பட்டுள்ளது. இந்த மதிப்பீடு விபர அறிக்கையில் உள்ள விபரங்களை அடிப்படையாகக் கொண்டு இருக்கும். மேலும் இந்நகர் மன்ற தீர்மான எண்.92 நாள்.23.08.2018 ன்படி கீழ்கண்டுள்ளவாறு மண்டல அடிப்படை மதிப்பு (Zonal Value) 01.04.2018 முதல் உயர்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது உயர்த்தப்பட்ட மண்டல அடிப்படை மதிப்பு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| மண்டலம் | தற்போதைய மதிப்பு | உயர்த்தப்பட்ட மதிப்பு |
|---|---|---|
| A | ரூ.1.80 | ரூ.2.70 |
| B | ரூ.1.20 | ரூ.1.80 |
| C | ரூ.0.60 | ரூ.0.90 |

**அலுவலக குறிப்பு**

01.04.2018 முதல் அமல்படுத்தப்பட அனுமதிக்கலாம்.

தனி அலுவலர்,
நெல்லியாளம் நகராட்சி.

நெல்லியாளம் நகராட்சிஅலுவலகம்,
பந்தலூர் – நீலகிரிமாவட்டம்.

## சாதாரண கூட்டம் 28/09/2018 வெள்ளிக்கிழமை

**பொருள் எண்.1**

நெல்லியாளம் நகராடசிக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்களுக்கு குடிநீர் வழங்கப்படும் மின் மோட்டார் சர்வீஸ் ஒயர்கள் இருமுனை சந்திபின் மற்றும் அதிக மின் அழுத்தம் காரணமாக எரிந்து பழுது ஏற்பட்டு மின் மோட்டார் இயக்க முடியாத நிலையில் உள்ளதால், சர்வீஸ் வயர்களை மாற்றி அமைக்க குடிநீர் அவசரம் அவசியம் கருதி இப்பணியினை செய்தவற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது

1. ராமசாமி காலனி, 2.ஏலமன்னா பன்னிக் கொல்லி, 3. ஓலிமடா 4.எம்.ஜி.ஆர்.நகர்

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.103

**பொருள் எண்.2**

நெல்லியாளம் நகராடசிக்குட்பட்ட பகுதிகளில் கனமழையின் காரணமாகவும் இருமுனை சந்திபின் காரணமாக பொது மக்களுக்கு வழங்க குடிநீர் மின்மோட்டார்கள் பழுதடைந்துள்ள 1. ஓலிமடா, 2. சோலமலை, 3.இந்திராநகர், 4. பந்தலூர் காலனி, 5. அட்டிக்கொல்லி 6. நாடுகாணி, 7. மரப்பாலம், 8.பெருங்கரை, 9. பெருங்கரை-3, 10. பந்தலூர் எம்.ஜி,ஆர்.நகர், 11. கூமூலை, 12.மேஸ்திரிக்குன்னு. 13.வாழவயல் அக்கரபுரா ஆகிய மின் மோட்டார்கள் பழுதடைந்துள்ளது. இப்பணிகளை செய்வதற்கு தனி அலுவலரின் அனுமதிக்கும், ஒப்புதலுக்கும் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்

**பொருள் எண்.3**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட தேவாலா வாழவயல், தேவாலா அம்பலக்கொல்லி ஆகிய இடங்களில் உள்ள குடிநீர்மின் மோட்டார்களின் மின மானிகள் பழுதடைந்துள்ளது. அம்மின்மானிகளை மாற்றி புதிய மின்மானிகள் பொறுத்துவதற்கு தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலகம், பந்தலூர் அவர்களிடமிருந்து கேட்பு தொகை ரூ.9168/- பெறப்பட்டுள்ள செலுத்துவதற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்

**பொருள் எண்.4**

மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, உதகை அவர்களின் செயல்முறை கடித ந.க.H1.எண்.6414/2018 நாள். 03.09.2018ன்படி இந்நகராட்சிக்கு 2016–2017ம் ஆண்டு ஆதிதிராவிடர் நல திட்டத்தின் கீழ் கீழ்கண்ட பணிகளுக்கு நிர்வாக அங்கீகாரம் வழங்கப்பட்டதை தனி அலுவலரின் பார்வைக்கும், பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்கோநகர் ஆதிதிராவிடர் காலனி சூரிய ஒளி தெருவிளக்கு அமைத்தல் ரூ. 5.75 (இலட்சம்)

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்

**பொருள் எண்.5**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் 110 மின் மோட்டார்கள் மற்றும் 10 டீசல் எஞ்ஜின்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மின்மோட்டார்களின் ஏற்படும் காயில் பழுது மற்றும் பம்பு பழுது, சர்வீஸ் ஒயரிங் செய்தல், ஸ்டாட்டர் பழுது ஆழ்துளை கிணறு மற்றும் கைபம்பு மோட்டார்கள், பழுது, டீசல் எஞ்சின் பழுது, பம்பு பழுது பார்த்தல் ஆகிய அனைத்து பராமரிப்பு பணிகளும் மேற்கொள்ள ஏற்படும் தோராய செலவினம் ரூ.10.00 லட்சத்திற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்

**பொருள் எண்.6**

2018–2019ம் ஆண்டு பொது நிதியின் கீழ் குடிநீர் திட்டத்திற்கு குடிநீர் திரவ குளோரினேசன் விநியோகம் செய்யும் பணிக்கு ரூ.9.80 இலட்சத்திற்கு 19.09.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும், அனுமதிக்கும்

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | M/S.Mitra Associates | 0.26% குறைவு |
| 2 | M/S.V.S.Inc Coimbatore | 0.13 % அதிகம் |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S.Mitra Associates என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலரின் ஒப்புதலுக்கு.

**பொருள் எண்.7**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்யும் பிரதானக் குழாய்கள் பழுதுகள், தடுப்பு அணைகளின் பிரதானக் குழாய்கள் பழுது பார்க்க நகராட்சி இருப்பு கிடங்களில் குடிநீர் குழாய் உதிரி பாகங்கள் இல்லாத காரணத்தினால் குடிநீர் அவசர அவசியம் கருதில் குடிநீர் உதிரி பாகங்கள் வாங்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.7.00 இலட்சத்திற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்

**பொருள் எண்.8**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட குடிநீர் திட்டங்களில்1. கைதக்கொல்லி, 2.ஆமைக்குளம் கல்லூரி 3.அம்பலக்கொல்லி 4. திருவள்ளுவர்நகர் 5. கூழமைல 6.இன்கோநகர், 7.அம்பேத்கர்நகர், 8.அண்ணாநகர், 9.எம்.ஜி.ஆர்.நகர் 10. மேங்கோரேஞ் செம்மண் 11.தொண்டியாளம், 12.பெருங்கரை, 13.ஏலமன்னா ST காலனி, 14.ராமசாமி காலனி, 15.அத்திமாநகர், 16. வாழக்கொல்லி 17. கோழிக்கொல்லி, 18. பொன்னூார் ஆழ்துளை 19. பொன்னூார் காலனி ஆகிய மின் மோட்டார் பம்பு அறை பழுதடைந்துள்ளதால், மின்மானிகள் மற்றும் சர்வீஸ் ஒயர்கள் பழுதடைந்துள்ளதால், குடிநீர் அவசரம் அவசியம் கருதி பம்பு அறை பழுது நீக்கம் செய்யவும் தனி அலுவலரின் அனுமதிக்கும், ஒப்புதலுக்கும் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்

**பொருள் எண்.9**

நெல்லியாளம் நகராட்சிக்குப்பட்ட ஏலமன்னா உரகிடங்கிற்கு தளம் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 10.00 இலட்சத்திற்கு தனி அலுவலரின் பார்வைக்கும் அனுமதிக்கும் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்

**பொருள் எண்.10**

நெல்லியாளம் நகராட்சிக்குப்பட்ட புதிய பேருந்து நிலையம் அமைக்கப்பட்டுள்ள இடத்திற்கு பேருந்து ஏறுவதற்கு இண்டர்லாக் வசதி அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2.70 இலட்சத்திற்கு தனி அலுவலரின் பார்வைக்கும் அனுமதிக்கும் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்

**பொருள் எண்.11**

நகராட்சிக்குட்பட்ட வணிக வளாகத்துடன் கூடிய புதிய பேருந்து நிலையத்தில் மேல்தளத்தில் புதிய அறை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.7.00 இலட்சத்திற்கு தனி அலுவலரின் பார்வைக்கும், அனுமதிக்கும் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்

**பொருள் எண்.12**

நெல்லியாளம் நகராட்சிக்குப்பட்ட ஏலமன்னா உரகிடங்கிற்கு வடிகால் தொட்டி மற்றும் மழைநீர் சேமிப்பு தொட்டி அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.7.00/- இலட்சத்திற்கு தனி அலுவலரின் பார்வைக்கும், அனுமதிக்கும் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்

**பொருள் எண்.13**

நெல்லியாளம் நகராட்சிக்குப்பட்ட கூமூலையில் தரைமட்ட நீர்தேக்கத் தொட்டி அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.8.00 இலட்சத்திற்கு தனி அலுவலரின் பார்வைக்கும், அனுமதிக்கும் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்

**பொருள் எண்.14**

நெல்லியாளம் நகராட்சியிக்கு கழிப்பிடம் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 3.00 இலட்சத்திற்கு தனி அலுவலரின் பார்வைக்கும், அனுமதிக்கும் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்

**பொருள் எண்.15**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9 ரவுஸ்டன்மலை குடிநீர் திட்டத்தில் உள்ள டீசல் எஞ்சின் , வார்டு எண்.11 தேவாலா RDI சாலை குடிநீர் திட்டத்தில் டீசல் எஞ்சின் மற்றும் வார்டு எண்.12 கூமூலை உள்ள டீசல் எஞ்சின் பழுது பார்க்கவும், பேட்டரி மாற்றுதல் பணிகள் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.0.50 இலட்சத்திற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்

**பொருள் எண்.16**

நெல்லியாளம் நகராட்சியில் 10 எண்ணம் டீசல் எஞ்சின் மூலமாக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி டீசல் எஞ்சினுக்கு டீசல் வாங்க தோராயமான செலவு தொகை ரூ.6.00 இலட்சத்திற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்

**பொருள் எண்.17**

ஏலமன்னா உரக்கிடங்கு பகுதியில் பெரிய பள்ளங்கள் உள்ளதால் வாகனங்கள் போகுவரத்துக்கு மிகவும் சிரமமாக உள்ளது. அப்பகுதியை சமன் செய்தவற்கு மண் நிரப்பும் பணிக்கு ரூ.4.50 இலட்சம் செலவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்

**பொருள் எண்.18**

நகராட்சிக்குட்பட்ட கோழிக்கொல்லி மற்றும் முண்டக்குன்னு ஆகிய பகுதியில் ஆதிவாசி மக்களுக்கு குடியிருக்கும் பகுதிகளில் சுயதொழில் தொடங்க நகராட்சி சமுதாயகூடம் பராமரிப்பு செய்யவும், முண்டக்குன்னு பகுதியில் ஆதிவாசி மக்களுக்கு குடிநீர் வசதி செய்து தரவிம் மதிப்பீடு ரூ.9.00 இலட்சம் செலவில் தயார் செய்யப்பட்டு தனி அலுவலரின் ஒப்புதலுக்கும், பார்வைக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்

**பொருள் எண்.19**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட உப்பட்டி பகுதியில் நடைபாதையுடன் கூடிய தடுப்பு சுவர் அமைப்பதற்கும், தொண்டியாளத்தில் குடிநீர் குழாய் அமைப்பதற்கும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.4.50 இலட்சம் தனி அலுவலரின் ஒப்புதலுக்கும், பார்வைக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்

**பொருள் எண்.20**

நெல்லியாளம் நகராட்சியில் 2018-2019ம் ஆண்டிற்கான Turif திட்ட பணிகளுக்கு மாநில அளவிலான செய்தி தாள்கள் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் விளம்பரம் செய்தமைக்குன்டான பட்டியல் தொகை ரூ.86625/- M/S. Madhu ads நிறுவனம் சென்னை அவர்களுக்கு வழங்க தனி அலுவரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்

**பொருள் எண்.21**

நெல்லியாளம் நகராட்சியில் 2017-2018ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சி பணிகளை கோவை மாலை முரசு நாளிதழில் தொழில்மலர் 2018இல் விளம்பரம் செய்தமைக்கு ரூ.9900/- பட்டியல் பெறப்பட்டுள்ளது. பட்டியல் தொகை **எம்**/எஸ். கோவை மாலை முரசு நிறுவனத்திற்கு வழங்க தனி அலுவரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்

**பொருள் எண்.22**

கடந்த 24/09/2018 அன்று பெய்த கனமழையின்போது திடிரென ஏற்பட்ட இடி, மின்னல் தாக்குதலில் நெல்லியாளம் நகராட்சி பொதுப்பிரிவில் பயன்பாட்டில் இருந்த கணிணி ஒன்று, பிரிண்டர் ஒன்று, பொறியியல் பிரிவில் பயன்பாட்டில் இருந்த கணிணி ஒன்று, பிரிண்டர் ஒன்று, மோடம் ஒன்று மற்றும் வரிவசூல் மையத்தில் பயன்பாட்டில் இருந்த மோடம் ஒன்று பழுதாகிவிட்டது. மேற்படி கணிணி மற்றும் பிரிண்டர் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்யவும், மோடம் 2 எண்கள் புதியதாக மாற்றவும் ஆகும் செலவினம் ரூ.75000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

நகராட்சியின் அத்தியாவசிய பணிகள் பாதிக்காமல் பணிகளை செய்ய அவசர, அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.23**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட பந்தலூர் பகுதியில் நகராட்சியின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் அம்மா உணவகத்தில் பயன்படுத்திவரும் மூன்று சமையல் எரிவாயு அடுப்புகள் மற்றும் கிரைண்டர் ஆகியவை பழுதடைந்துள்ளதை பழுது நீக்கம் செய்ய பெறப்பட்ட விலைப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண். | விலைப்புள்ளிகள் விவரம் | தொகை ரூ |
|---|---|---|
| 1 | திரு.துரைசாமி, ரிசாந்த் எலக்ட்ரிக்கல்ஸ், பந்தலூர் | 29950/– |
| 2 | ரம்யா எலக்ட்ரிக்கல்ஸ், பந்தலூர் | 30480/– |
| 3 | ரவி எலக்ட்ரிக்கல்ஸ் & சவுண்ட் சிஸ்டம்ஸ், பந்தலூர் | 30100/– |

**அலுவலக குறிப்பு**

1. அனுமதி அளிக்கலாம்
2. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்தவிலை விலைப்புள்ளி அளித்துள்ள திரு.துரைசாமி, ரிசாந்த் எலக்ட்ரிக்கல்ஸ், பந்தலூர் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கவும், பட்டியல் தொகை வழங்கவும் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.24**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் முதியோர் உதவித்தொகை மற்றும் இதர உதவித்தொகைகள் பெற வறுமைக்கோடு பட்டியலில் பெயர் சேர்த்து பட்டியல் எண் வழங்ககோரி பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கு வறுமைக்கோடு பட்டியல் எண் வழங்க தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பெயர் மற்றும் முகவரி | பட்டியல் எண் |
|---|---|---|
| 1 | திரு.பெரியசாமி, த.பெ.முத்துசாமி, க.எண்.17/300, தொண்டியாளம் | OAP BPL No.112 |
| 2 | திருமதி.அமிர்தம், க.பெ.பெரியசாமி (லேட்), க.எண்.12/82, கூமூலை | OAP BPL No.113 |
| 3 | திரு.சுலைமான், த.பெ.குஞ்சப்பா, க.எண்.11/383, மூச்சுக்குன்னு, தேவாலா | OAP BPL No.114 |
| 4 | திருமதி.காளியம்மாள், க.பெ.பெரியண்ணன் (லேட்), க.எண்.21/258, நால்பாடி, அத்திகுன்னா | OAP BPL No.115 |
| 5 | திரு.கந்தையா, த.பெ.வடுகன், க.எண்.19/122C, பெருங்கரை, உப்பட்டி | OAP BPL No.116 |

**அலுவலக குறிப்பு**

அனுமதி அளிக்கலாம்.

**பொருள் எண்.25**

நெல்லியாளம் நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் மினி லாரி TN43-8153 வாகனத்திற்கு 30/10/2018 அன்று தகுதி சான்று காலாவதி முடிவடைவதால், அதனை புதிப்பிக்க உத்தேச செலவினத் தொகை ரூ.43000/–க்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.26**

நெல்லியாளம் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவிற்கு தேவையான தளவாடப் பொருட்கள் மற்றும் துப்புரவு பணியாளர்களுக்கான பாதுகாப்பு சாதனங்கள் சப்ளை செய்யும் பணிக்கு 18.05.2017 ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி ரூ.7.50/– இலட்சம் அளித்த M/s.கிருஷ்ணா எண்டர்பிரைசஸ், மேட்டூர், சேலம் நிறுவனத்தின் மூலம் மேற்படி பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டது. மேலும் மேற்படி தொகையுடன் கூடுதலாக ரூ.113636/–க்கு M/s.கிருஷ்ணா எண்டர்பிரைசஸ், மேட்டூர், சேலம் நிறுவனத்தில் இருந்து பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டதால், சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு மேற்படி தொகை வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.27**

நெல்லியாளம் நகராட்சி பணியாளர்களுக்கான சீருடை கோ ஆப் டெக்ஸ் நிறுவனம் மூலம் கொள்முதல் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.28**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட வீடுகளில் சேகரமாகும் குப்பைகளை அவரவர் வீடுகளில் மக்கும் குப்பைகளை உரமாக்கும் முன்னோட்டமாக 50 வீடுகளில் தொட்டிகளை வைத்து உரமாக்க 50 எண்ணிக்கை தொட்டிகள் பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.29**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட உரக்கிடங்கு மற்றும் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஈக்களை கட்டுப்படுத்த ஈ மருந்து கொள்முதல் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

| |
|---|
| **<u>பொருள் எண்.30</u>**<br>நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளிலிருந்து தினசரி பெறப்படும் குப்பைகளை உரக்கிங்கில் மக்கச்செய்து உரமாக்க தேவைப்படும் EM கரைசல் கொள்முதல் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>அனுமதி வழங்கலாம். |
| **<u>பொருள் எண்.31</u>**<br>நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொசுக்களை கட்டுப்படுத்தும் பொருட்டு கொசுமருந்நது தெளிக்கும் இயந்திரத்தில் பயன்படுத்தப்படும் சிலிண்டர்கள் கொள்முதல் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>அனுமதி வழங்கலாம். |
| **<u>பொருள் எண்.32</u>**<br>தமிழ்நாடு அரசு பணியமைப்பு – நகராட்சி பொது சுகாதாரப்பணி – துப்புரவு பணியாளர் பணியிடங்கள் தோற்றுவித்தல் – அளவுகோல் – திருத்தியமைத்த அரசாணை எண்.101, நாள்.30.04.1997–ல் ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி நெல்லியாளம் நகராட்சியில் மொத்தம் 140 துப்புரவு பணியாளர்கள் பணியமர்த்தப்பட வேண்டும். ஆனால் அதில் தேர்வு செய்யப்பட்டவை 10, அதில் தற்போது இந்நகராட்சியில் 9 துப்புரவு பணியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். மேலும் காலிப்பணியிடம் 1 ஆகும். அதில் தற்போது ஆள் சப்ளை மூலமாக (Out Sourcing) 50 துப்புரவு பணியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். இதன் ஒப்பந்தப்புள்ளி காலம் 31/01/2019 அன்றுடன் முடிவடைகிறது.<br>நெல்லியாளம் நகராட்சி 94.28 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டுள்ளது. மேலும் இந்நகராட்சி மலைப்பகுதியாக உள்ளதாலும் பொதுசுகாதாரப் பணிகளை மேற்கொள்ள தேவையான துப்புரவு பணியாளர்கள் இல்லாத காரணத்தால் 81 துப்புரவு பணியாளர்களை நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவரின் தினக்கூலி அடிப்படையில் ஆள் சப்ளை மூலம் (Out Sourcing) துப்புரவு பணியாளர்களை பணியமர்த்த நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரனை அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>அனுமதி வழங்கலாம். |
| **<u>பொருள் எண்.33</u>**<br>நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11இல் அமைந்துள்ள அம்பலக்கொல்லி என்னும் இடத்தில் சுமார் 30 குடும்பங்கள் வசித்து வருகிறார்கள் மழையின் காரணமாக அவ்விடத்தில் தடுப்பு சுவர் இடிந்து வீடுகள் விழும் நிலையில் உள்ளதால், அவ்விடத்தில் தடுப்பு சுவர் கட்டுவதற்கு ஆகும் செலவு தொகை ரூ.7.50 இலட்சம் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>அனுமதிக்கலாம். |
| **<u>பொருள் எண்.34</u>**<br>தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2018-19-ம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கான மானியக் கோரிக்கைஎண். 34,அறிவிப்பு எண்.14-ல் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ளஅனைத்துவார்டுகளிலும் உயர்தரம் வாய்ந்தகுடிநீர் மிகக் குறைந்தவிலையில் வழங்கதானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic vending centre) நிறுவப்படும் எனஅறிவிக்கப்பட்டுள்ளது என்பதிற்கிணங்க, நெல்லியாளம் நகராட்சியில் உள்ள 21 வார்டுகளிலும் தன்னார்வதொண்டு நிறுவனம் மூலம் பொது கிணறு மற்றும் ஆழ்துளைக்கிணற்றுநீரை ஆதாரமாக கொண்டு தீவிரவடிகட்டுதல் மற்றும் எதிர்சவ்வூடுபரவல்முறையில்சுத்திகரிக்கப்பட்டுபொதுமக்களுக்குவழங்கும் வண்ணம் சுத்திகரிக்கும் இயந்திரம் நிறுவஏற்படும் செலவினத்தொகைஒன்றுக்குஉத்தேசமதிப்பீட்டுத் தொகை ரூ.18.00 இலட்சம் (ரூபாய்பதினாறுஇலட்சம்) வீதம் மொத்தம் 21 வார்டுகளில் ரூ.378.00 இலட்சம் (ரூபாய் முன்னூத்தி எழுபத்தி எட்டு இலட்சம்) ஆகும். |

இத்திட்டத்தைநிறைவேற்ற மூலதனசெலவினத்தைதனியார் தொழில்நிறுவனம் / /தொழில்முனைவோர்கள்CSR மற்றும் இதரதொகையில் இருந்து ஈடு செய்துகொள்ளவும், /இயக்குதல்பராமரித்தல்செலவினத்தைபயனாளிகளிடம் இருந்து பெறப்படும் கட்டணத்தில் இருந்து ஈடு செய்துகொள்ளவும், மின் கட்டணத்தைதன்னார்வதொண்டுநிறுவனம் மூலம் செலுத்தவும், நகராட்சி மூலம் இடம் மற்றும் நீர் ஆதாரம் மட்டும் வழங்கதிட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே, நகரில்உள்ளஅனைத்துவார்டுகளிலும் வார்டுக்கு 1 வீதம் தானியங்கும் குடிநீர் மையங்கள்(Automatic Vending Centres) தனியார் தொழில்நிறுவனங்கள் / தொழில்முனைவோர்கள்CSRமற்றும் இதரதொகையிலிருந்துஈடு செய்துகொள்ளவும், மேலும், அனுபவம் வாய்ந்தமற்றும் உரியதொழில்நுட்பநுணுக்கங்களைகொண்டதனியார் தொழில்நிறுவனத்தினைதேர்வுசெய்யஏதுவாக, அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளில் "Expression of Interest" விளம்பரம் செய்து தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்யவும் அனைத்து கீழ்கண்ட வார்டுகளிலும் செயல்படுத்தவும் இதற்கானஅனுமதி நகரரட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் அனுமதி பெறவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | சுத்திகரிப்புநிலையம் அமைக்கதேர்ந்தெடுக்கப்பட்டஇடம் |
|---|---|---|
| 1 | 1 | நெல்லியாளம் பஜார் |
| 2 | 2 | அத்திமாநகர் |
| 3 | 3 | வாழவயல் |
| 4 | 4 | தேவாலா அட்டி |
| 5 | 5 | மரப்பாலம் |
| 6 | 6 | ஆமைக்குளம் |
| 7 | 7 | கீழ்நாடுகாணி |
| 8 | 8 | நாடுகாணி |
| 9 | 9 | மூச்சுக்குன்னு |
| 10 | 10 | தேவாலா பஜார் |
| 11 | 11 | ஆர்.டீ.ஐ..சாலை |
| 12 | 12 | கூமூலை |
| 13 | 13 | அம்பேத்கார் நகர் |
| 14 | 14 | பந்தலூர் கிராம அலுவலகம் |
| 15 | 15 | பந்தலூர் |
| 16 | 16 | மே.ங்கோரேஞ் |
| 17 | 17 | தொண்டியாளம் |
| 18 | 18 | ஓலிமடா |
| 19 | 19 | ஏலமன்னா |
| 20 | 20 | உப்பட்டி |
| 21 | 21 | அத்திக்குன்னா மட்டத்துபாடி |

<u>அலுவலக குறிப்பு</u>

அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள் எண்.35</u>**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட பந்தலூர் பகுதியில் நகராட்சியின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் அம்மா உணவகத்திற்கு 01/07/2018 முதல் 30/09/2018 முடிய மூன்று மாதங்களுக்கு திரு.தாஜ்நிஷா காய்கறிகள் வியாபாரம், பந்தலூர் என்பவர் மூலம் காய்கறிகள் பெறப்பட்டு வந்தது. தற்போது 01/10/2018 முதல் 31/12/2018 முடிய மேலும் மூன்று மாதங்களுக்கு மேற்படி திரு.தாஜ்நிஷா காய்கறிகள் வியாபாரம், பந்தலூர் அவர்கள் மூலம் அம்மா உணவகத்திற்க காய்கறிகள் பெற்றுக்கொள்ள தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

அனுமதி அளிக்கலாம்.

தனி அலுவலர்
நெல்லியாளம் நகராட்சி